முதுகலை தமிழ் - இரண்டாம் ஆண்டு

வருடம் 2018 - 2019 on wards பருவம் : 4

பாடத்தலைப்பு : தாள் XI - சங்க இலக்கியம்

பாடக்குறியீட்டு எண் : 18 MTA41C

அலகு : 5 மலைபடுகடாம் முழுவதும்

தயார் செய்தவர் :

முனைவர். வை. செல்வசுப்பிரமணியன்

தமிழ்த்துறை

தொடர்பு எண் : 9952621715.

## மலைபடுகடாம்

பழைய புலவர் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார் பாட்டுடைத் தலைவன், நன்னன் சேய் நன்னன். ஐந்நூற்று எண்பத்து மூன்று அடிகளைக் கொண்ட இப்பாட்டு இன்று திருவண்ணாமலை செல்லும் வழியில் உள்ள செங்கம் என்றும் ஊரை அடுத்த மலைநாட்டை ஆண்ட சிற்றரசன் நன்னன் செங்கண்மா என்று அன்று இவ்வூர் அழைக்கப்பட்டதால் இவன் செங்கண்மாத்து வேள் நன்னன் என்று அழைக்கப்பட்டதாகவும் கூறுவர். மலைபடுகடாம் என்பதற்கு மலையில் எழும் மதம் என்பது பொருள். மதம் இங்கே முழக்கத்தைக் குறித்து மலையானையாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. மலை வாழ் மக்கள், அவர்கள் வாழ்க்கை முறைகளையும் நன்னனிடம் பரிசில் பெற்று வரும் பாணர் பலர், மலைவீழ் அருவி போலப் பொன்பொருளோடு கீழிறங்கி வரும் காட்சி வருணனைகளும் கொண்ட மலைபடு கடாம் பத்துப்பாட்டின் முத்துமணிக் கோவை.

(1-20) ''திருமழை தலைஇய இருள் நிற விசும்பின் ....
இழைச்சூழ நிவப்பின் இயவுக் கொண்டு ஒழுகித்

திரு- செல்வம், வளம் இரண்டையும் தரும் மழைமேகம், வானில் அதிர்வது போல, பண் அமைத்து, வாரால் இறுகக் கட்டப்பட்ட மத்தளத்துடன் சிறு பறையும், கஞ்சதாளமும் மயிற்றுடி ஆடப்பெற்ற, யானை நெடுமூச்சு விடுவது போல ஓசை தரும் நெடுவங்கியத்துடன், இனி என்றும் ஓசை தரும் தூம்பும், குழலும், தட்டைப் பறையும், தாளமும், சல்லியும் என்று வகுக்கப்பட்ட பலவிதமான இசைக்கருவிகளை, கார் காலத்தில் பழுக்கின்ற பலாமரத்திலே காய்கள் தொங்குவது போலத் தோளின் இருபக்கமும் கட்டித் தொங்க விட்டுக்கொண்டு, காவடி போல இசைத் சுமந்தபடி, பெரிய மலையில் உள்ள சிறிய பாதை வழியாக, வில்லும் கையுமாக வாழும் வேட்டுவர், வழி நடப்பவர்களுக்குத் துன்பம் தராமல் திறை செய்யும், பாறைகள் நிறைந்த காட்டு வழியே, வழி நடக்கும் துயரம் கருதிப் பார்க்காமல் செல்வோம்.

பாடுக பாணனே சுதி கூட்டி யாழ் மீட்டி...

''தொடித்திரிவு அன்ன தொண்டுபடு திவவின் ....
திறைபல முற்றிய வைதீர் பாணரொடு''

(21-40)

கைவளை போன்ற ஒன்பது வார்க்கட்டுகளையும் இழுத்துப் பிணித்து, அவை பிறழ்க்கோளியுள்ள தன்மையைச் சரிசெய் பார்த்துக் காதால் கேட்டுச் சுதி கூட்டி, ஒலி தரும் பத்தரில் பசை சேர்த்து, நறுமணம் கமழும் சிவந்த பூவையுடைய பெண்கள் போல ஒளிர் நிறைய உந்தியும், கருங்கனி போன்ற கோடும் கொண்ட பேரியாழை, இசை எழுப்பச் சரி பண்ணி, அதன் ஒலிக்கும் நரம்புகளும் கையாண்டு, இசையை விரும்பிக் கேட்டுப் போற்றுகின்ற, அரசர்களுடைய பேரவைகளில், பாணருடன் சென்று, இனிய இசை விருந்து நிகழ்த்த வல்ல பாணனே!

"<u>நல்ல நேரம், பரிசில் தேடி நீ வந்த நேரம்</u>
உயர்ந்தோங்கு பெருமலை ஊறின்று ஆறலின் ....
புள்ளினர் மன்ற எற்றாக் குறுகலின்"

ஓங்கி உயர்ந்த மலை அது. அதில் ஏறுவதில், ஒன்றும் துன்பம் இல்லை; என்றாலும் வழி நடந்த களைப்பால், நாயின் நாக்குப் போன்ற காலடி, பாதையில் உள்ள கற்கள் பட்டதால் சிவக்க, கூந்தல் மயில் தோகை போல அசைய, இளைத்து மெலிந்தவராய், உன்னுடன் விறலியர்கள் நடந்து வருகின்றனர். நீர் நிறைந்த குளத்துக்குள் விழுந்தது போன்ற குளிர்ச்சியைத் தரும், அருவி நீர் ஓடி அழுக்கு நீங்கித் தூய்மையாக இருக்கும் மணல் வெளியில் கூத்தர்கள் தலைவனே! கொஞ்சம் இளைப்பாறிக் கொள்

புதுமலர்கள் சிந்திக் கிடக்கும் கரைகளில் மோதி, வழிந்து மேலோடும் மலை அருவி, கடலை நோக்கிப் போவதைப் போல; நாங்கள் அவனிடம் இருந்து தான் (நன்னனிடம் இருந்து பரிசு பெற்று) வருகிறோம். நீங்களும், பழம் பழுத்த சோலைகள் நோக்கிப் பறவைக் கூட்டம் கனி உண்ண, பறை கொட்டுவது போலச் சிறகடித்துப் பறக்குமே, அது போல வண்டுகள் மொய்க்கும் மலர்மாலை புரளும் மார்புடையவன்; ஓவியத்தில் எழுதியது போன்ற அழகிய தோளும், மார்பும் உடைய மகளிர் கணவன். போரில் பகைவரை வெல்லும் வீரம் மிக்கவன், இசை பாடவருகின்ற சொல்லேர் உழவர்க்கு அன்பு செய்பவனுமாகிய வில்லை ஏந்திய, வீரப்பூண் அணிந்த நன்னன் மகன் நன்னனைச்

சென்று காண்பீர்களேயானால், நீங்கள் பரிசில் பெற எண்ணிப் புறப்பட்ட நேரம் நல்ல நேரம் என்று கொள்ள வேண்டும், எப்படி என்றால் நீங்கள் எம்மை இப்போது வழியில் சந்தித்ததே அதற்கான சான்று.

## நல்லவர் போற்றும் வல்லவன் நன்னன்

"ஆற்றின் அளவும் அசையும் நல் புலமும் ...... நல்லிதின் இயக்கும் அவன் சுற்றத்து ஒழுக்கமும்"
(67-80) நன்னன் நாடு நோக்கிச் செல்கின்ற வழியில் உள்ள நன்மை தீமைகளை நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

வற்றாத வளமுடையது, நன்னனுடைய மலை நாடு. மற்ற நாட்டினர்க்கும் உணவு தந்து உதவும் வண்மையும் வளமும் கொண்டது அவன் நாடு. மலைகளும் சோலைகளும், வனவிலங்குகளுக்குப் புகலிடமான காடுகளும், நிறைந்தது. உலகம் உள்ளளவும், தன் புகழ் கெடாதபடி, பகைவரைப் புறமுதுகு காட்டற ஓடச் செய்து, அவர்களுடைய அணிகலன்களைக் கவர்ந்து கொண்டு, அவற்றைப் பாடும் பரிசில் பெற வருவோர்க்கு எல்லாம் வாரி வழங்குகின்ற வான் மழை அவன். தன்னை இகழ்ந்தவர்களைத் தண்டிக்கின்ற அவனது ஆற்றலும், புகழ்ந்து பணிந்தவர்களுக்கு, தான் வென்ற பகையரசர்கள் நாட்டினையும் சேர்த்துத் தருவதோடு, நின்று விடாது. தேரும், வேலும் கொடுத்துக் கொண்டே இருக்கின்ற பொய்க்காது பெய்யும் பருவமழை போன்றவன் அவன். சான்றோர்கள் நிறைந்தது அவனது அரசவை. கற்றறிந்த வல்லோர் ஆயினும் சபை அறிந்து அவர் கூற முடியாது விட்டவற்றைத் தம் நுண்ணறிவின் உணர்ந்து எடுத்துச் சொல்லுகின்ற ஆற்றலாளன் இவன். நல்வழியில் இயங்கி - இயக்கும், இவனது கல்விச் சுற்றமும் - உயர் திணைச் சிறப்பும்.

## கொடை மடம் காத்த குலத்தவன் நன்னன்

(81-105) நீர் சூழ்ந்த இந்த உலகமே அஞ்சி நடுங்கும் வலிமை கொண்ட நவிர மலையில் கோயில் கொண்டுள்ளவன். தேவர்களுக்காக நஞ்சை உண்ட பரமன். இருளைக் கிழித்து ஒளி உண்டாக்க எழுகின்ற ஞாயிறு போன்ற, குன்றாப் புகழ் உடையவன் நன்னன். தூரத்தில் உள்ளதே பகைவர் தேசம் என்று விட்டுவிடாமல், படை நடத்திச் சென்று,

பகைவர் படை அழித்து, வீரர்களைக் கொன்று குவித்த வீரம் உடையவன் அவன். யானைப் படையை அழித்த வேல் வல்ல தம் வீரர்களுக்கு, ஊரும் நாடும் தந்து கொடையும் காத்தவர்கள் அவன் முன்னோர்கள். இரை தேடித் தின்ன அலையும் வளைந்த கால்உடைய முதலைகள் கிடக்கும் அலை மோதும் அளவுக்கு ஆழமான, கல்லைக் குடைந்து செய்த அகழியையும், வான் தொட வளர்ந்த மாடங்களையும் கொண்ட நன்னன் வாழும் நல்லூரே நீ. நாடிச் செல்ல வேண்டிய ஊர். அந்தப் பாடும் பெரும் ஊரின் பெருமையும் சொல்லுவேன் கேட்பாயாக. வளந்தரும் புதுவருவாய் உடையது அவன் ஊர். புதுவருவாயும் அவன் ஊரோடு பிறந்தது. மின்னி இடி இடித்து மழை பொழியும், வானம் வழங்குகின்ற வளத்தால், மண்ணில் போட்ட செய்யாமல் விளையும். வேண்டும் பயன் தரும். மழை வளம் நிறைந்த அவன் கொல்லையும் நிலமும்.

வெள்ளைப் பூப் பூக்கும் கொள்ளைக் கொடி விரிந்து படரும். விதை நிலத்தில் விதைத்த எள் பழுக்கும் ஏழு காய் என்ற கணக்கில் எண்ணெய்ப் பதம் கொண்டு விளையும்.

## வாழையும் கரும்பும் வளம் தரும் நாடு

"நெய்கொள ஒழுகின பல்கவர் ஈர்ந்தினை ... துறுகல் அன்றிய சோலை வாழை (106 - 131)

பசும் முற்றின, யானையின் இளங்கன்றுகள் துதிக்கைகளைப் பிணைத்துக் கொண்டிருப்பது போலக் கதிர்கள் முற்றி இருக்கும் தினைப்புனத்தில் தயிர்த்துளிகள் சிந்தியது போல அவரைப் பூக்கள் கொட்டிக் கிடக்கும். எருமை மாடுகள் படுத்துக் கிடப்பது போலப் பெரிய கற்கள் கிடக்கின்ற வழிகளில் உள்ள தினைப் புனங்களில் பெரிய கதிர்கள் முற்றி அறுவடைக்குத் தயாராக இருக்கும். ஐவன நெல்லும் வெண்நெல்லும் விளைந்து முற்றி இருக்கும். வேல் படை கொண்ட வீரர்கள் விழுந்து கிடப்பதைப் போல, காற்றில் தலை சாய்ந்து கரும்புகள் வெட்டப்பட்டு ஆலைக்குச் செல்லும் நிலையில் இருக்கும். மழை பெய்து ஓய, மலைப் பகுதிகளில் மூங்கில் நெல், அவல் இடிக்கும் பதத்தில் முற்றி விளைந்திருக்கும். உழுது நீர்ப்பாய்ச்சாமல், குத்திப் பதப்படுத்தப்பட்ட வெட்டு நிலங்களில் வெண் சிறுகடுகு விளைச்சல்

மிகுந்திருக்கும். கரிய நிறமுடைய நெய்தல் பூக்கள், நெல்வயல் நிறையப் பூத்திருக்கும். அடிதிரள வளர்ந்த கிழங்கு வளர்ந்து உறைப்பை உடையதாக முதிர்ந்து இருக்கும். கொடிகள் செழித்துப் படர்ந்த, குழிகளின் கவலைக் கிழங்குகள் மாவாகும் பதத்தில் முற்றிப் பருத்து இருக்கும். யானை முகத்தில் குத்தும் அங்குசம் போலக் கரிய முள்ளை உடைய வாழைப் பூக்கள் பக்கத்தில் உள்ள பாறையில் மோதித் தொங்கும்.

தொங்கும் மத்தளம் போல், தோன்றும் பலாப்பழங்கள்
"இருகுகுன்ற முழுகப் பழுத்த பயம்புக்கு.... வெறிக்களம் கடுக்கும் வியல் அறை தோறும் (132 - 150)

காய்கள் நிறைந்த வெறுமெங்கிலின் கிளைகள் காற்றில் அசைந்தாடும், அகன்ற பாறை நிலங்களில் எல்லாம். அங்குள்ள மரங்கள் பருவகாலம் இல்லாத போதும் பலன் தரும். அந்த அளவுக்கு நிலவளம் கொண்டது நன்னனின் நாடு. காற்றால் அசையும் நாவல் மரங்களின் கருமை நிறக் கனிகள் தரையில் எங்கும் விழுந்து கிடக்கும். நீர்ப் பதமுடைய உவலைக் கொடியும், சுவலைக் கிழங்கும் நிறைந்திருக்கும். அவை, உணவு தந்து வேறு எதையும் தேடப் போகாதபடி வழி நடப்பவரைத் தடுக்கும். இனிய மாமரத்தின் பழங்கள் முற்றிக் கனிந்து தொங்கும். பருத்த அடி உடைய பலமரங்களின் கனிகள் முற்றிப் பழுக்க வெடித்து அதன் சுளைகளும், கொட்டைகளும் எங்கும் சிதறிக் கிடக்கும். பேராந்தைப் பறவைகள், ஆணும் பெண்ணுமாக மாறி மாறி ஆகுளிப் பறவை போல ஒலி எழுப்பும். நெடுமலைச் சாரல்கள் எங்கும் மழைவளம் மிகப் பெற்றதால் வளர்ந்த பலாமரத்தின் காய்கள், சடத்தர்கள் கொண்டு செல்லும் மத்தளம் போல, மரக்கிளைகளில் தொங்கிக் கொண்டிருக்கும். நெருப்புச் சுடர் போலத் தெரியும் செங்காந்தள் பூவின் மொட்டுக்களை ஊன் துண்டென்று எண்ணிக் கொத்திச் சென்ற பருந்து, அது மலர் மொட்டு என்பது தெரிந்ததும் விட்டெறிய, அப்படிக் கீழே விழுந்த பூமொக்குகள் அகன்ற பாறை இடமெல்லாம் 20
சிந்திக் கிடக்க அது வெறியாட்டுக் களம் போலத் தோன்றும்.

## நெய்ச்சோற்று விருந்து

(151-169) இப்படி மனை வீடு போலக் காயும், கனியும் கிழங்கும், தேனும் நிறைந்து காணப்படும் மலைச்சாரலில் உள்ள மலைவாழ் மக்களாகிய, வேடர்களின் குடியிருப்புகள். அவர்கள் மலைகளில் தேன் எடுப்பதையும், காடுகளில் கிழங்கு தோண்டு-வதையும், விலங்குகளை வேட்டையாடுவதையும் தொழிலாகக் கொண்டவர்கள். அப்படிப் பட்டவர்கள் வாழும் குடியிருப்புகளை அடைந்தால் அங்கு அவர்கள் தரும் சிறு கண்ணையுடைய பன்றித் தசை, மாற்றுகின்ற உணவுகளைத் தாங்கள் பொரித்து வைப்பர், யானைத் தந்தங்கள் நிறுத்தப்பட்டிருக்கும் வீடுகளில் தரப்பெற நீங்களும் உங்கள் சுற்றத்தாரும் பெற்று உண்டு மகிழ்வீர்களாக. அன்றைய பொழுதுக்கு அதைப் பெற்று அங்கே இளைப்பாறுங்கள்.

அடுத்த நாள் காலை புறப்பட்டு, பூங்கொத்துக்கள் கூந்தலில் சூடிய உம் விறலியர், சுற்றத்தாருடன் அசோக மரத்தினுடைய கொழிக்கும் பூங்கிளைகள் காற்றில் அசைந்தாட ஒலி எழுப்பும். காட்டு வழி நடந்து, மலைச்சாரலின் பக்கம் உள்ள சிற்றூரைச் சேருங்கள். சேர்ந்தவுடன் அங்கே உள்ளவர்களிடம், 'வருந்திப் போரிடத் தேவையில்லாமலே, பயந்தோடிய பகைவரை வென்ற பெருமைக்குரிய நன்னனுடைய விருப்பத்துக்குரிய சுற்றத்தார்கள் நாங்கள்' என்று சொல்லுங்கள். சொல்லிவிட்டு, நீங்கள் வெளியே நிற்க வேண்டாம். உங்கள் வீடு போலவே தாராளமாக உள்ளே நுழையுங்கள். உரிமை உடைய உறவினர் போல அவர்கள் கேளாமலே நீங்கள் கேண்மை உடையவர்-களாக; நெடுந்தூரம் நடந்து வந்த உங்கள் களைப்பு நீங்க அவர்களிடம் இன்மொழி பேசுங்கள். அவர்கள் தரும் நெய்யில் பொரித்த தசையொடு வேகவைத்த தினைச் சோறும் தர உண்டு மகிழுங்கள்.

## வீடுகள் தோறும் விருந்து

(170-185) இவையே அல்லாமல அவ்வூரிலே மலைமீது ஏறி, கொண்டு வந்த, மலையினை

பொருள்களான, தேன் திணை ஊன்கறி இவை தவிர, மூங்கில் குழாய்களுக்குள்ளே, ஊற்றி நீண்ட நாள் பூரிக்க வைக்கப்பட்டுள்ள கள்ளின் இனிய சுவைத் தேறலையும், நெல்லரிசி கொண்டு செய்த கள்ளையும் நிறைய உண்டு, கள்ளுண்டு மயக்கம் தீர்ந்த காலைப் பொழுதில், அருவிநீர் அடித்துக் கொண்டு வந்த பலாக் கொட்டைகளை, மாவாக்கி, அதனுடன் புளியம் பழத்தின் குழம்பையும் சேர்த்து மோர் சவட்டி, மூங்கிலரிசியுடன் மனைச்சாரல் எல்லாம், மணக்க சோறாக்கிய, உச்சிக் கொண்டையில் நறுமலர்களைச் சூடிக் கொண்டிருக்கிற குறத்திகள், கடமான் கறியும் நாயை ஏவி வேட்டு அது கவ்விக் கொண்டு வந்த உடும்பின் கொழுந்தசையையும் உண்ணத் தருவார்கள். இப்படிப்பட்ட விருந்தோம்பலை, உங்களை உறவு முறை சொல்லி உபசரிக்கும் தன்மையை, அங்குள்ள எல்லா வீடுகளிலும் பெறுவீர்கள், பெற்று மகிழுங்கள்.

## இரவில் பயணம் இடர் நிறைந்தது.

செஞ்செய் முன்பன் கிளிசில் முன்னிய.... வருக்கியை தவிர்த்து மரம்மனையாக் கழிமின் (186-210)

இப்படி எல்லாம், போகிற வழிகளில் நீங்கள் விருந்து பெறுவதால், போர்வல்ல நன்னனைக் கண்டு பரிசில்பெற வேண்டும் என்று நீங்கள் கொண்ட எண்ணத்தையே மறந்து, ஆங்காங்கே நீண்டநாள் தங்கிவிடவும் கூடும். தவறு உங்களுடையதன்று. நன்னனது நாட்டினர் விருந்தோம்பல் தன்மை அத்தகையது. எனவே அப்படித் தங்கி விடாது பயணம் தொடருங்கள்.

இதுவரை நீங்கள் போகும் வழிகளில் உள்ள நன்மைகளைச் சொன்னேன். இனி அங்கு உள்ள தீமைகளைச் சொல்லுவேன்; கேளுங்கள்.

போகும் பாதையில் சூழ்ந்திருக்கும் குவளை மலர்கள் தெய்வமும் சூடுபவை. எனவே அதை நீங்கள் அறியாது தொட்டு விட்டாலும், மலை உறையும் தெய்வங்கள் இருப்பிடங்களைக் காண நேரிட்டாலும் உயிர்போகும் படி நீங்கள் அஞ்சி வருந்த நேரிடும். எனவே நீண்ட நாட்கள் இந்த நாடுகளில் தங்கிவிடாமல், மலை நாட்டை விட்டு, நிலத்துக்கு வாருங்கள். முற்றி விளைந்த தினைப் பயிரைப் பன்றிகள் புகுந்து அழித்துவிடாமல் தடுக்க பாதைகள் எங்கும் கருங்கல் பொறிகள் வைத்திருப்பார்கள். அதில் சிக்கி நீங்கள் அழியவும் நேரும். எனவே இரவில் வழிநடப்பதைத் தவிர்த்துக் கதிர் கிளம்பும் காலையில் பயணம் தொடருங்கள். அப்படித் தொடரும் போதும் பலரும் போகாத புது வழிகளில்

போகத் துணியாதீர்கள். காரணம் பெருமரக்காடுகள் உள்ள குழிகளிலும், பள்ளங்களிலும், கற்பிளவுகளிலும் பாம்புகள் மறைந்து இருக்கும். எனவே மரத்தில் ஏறிப்பார்த்தும், கை கொட்டி ஆர்த்தும், வளையணிந்த விறலியர் அவற்றிற்கு அஞ்சித் தொழுது கைகூப்பவும், அவை விலகி விடும். நீங்களும் அவ்வழியை விட்டு நீங்கி வலது புறமாகச் செல்லுங்கள். கதிர் முற்றி விளைந்திருக்கும், தினைப்புனம் காக்கின்ற குறவர்கள், உயர்ந்த பரண்மேலே நின்று கொண்டு, யானைகளை விரட்ட வீசும் கவண்கற்கள் மேலே பட்டால் உயிர்போகும் வலியுண்டாக்கும். இதற்கு அஞ்சி, குரங்குகள் குட்டிகளோடு, மரங்களில் தாவ, மூங்கில் புதர்களைக் கடந்து வரும். எனவே அவை உங்கள் மீது பாய்ந்துவிடாத -படி பார்த்துக் கொள்ள, மறைவாக மரங்களுக்கு இடையே ஒதுங்கி ஒளிந்து கொள்ளுங்கள்.

<u>கோல் கை கொண்டு போதலே நன்று.</u>

"உரவுக்களிறு கரக்கும் இடங்கர் ஒடுங்கி)....
அருவை வெண்கோல் கொண்டனிர் கழிமின்
(221 - 224)

வலிமை மிக்க யானையைக் கூட விழுங்கி விடக் கூடிய, காவல் இடங்களைக் கவனமாகக் கடந்து செல்லுங்கள். இருள் மண்டிக் கிடக்கும் மடுக்கள், நீர் ஒழுக்கு அறிந்த காட்டாற்று வழிகள் இங்கெல்லாம் நிலம் வழுக்கும். எனவே நடக்கும் போது மரங்களைச் சுற்றியுள்ள கொடிகளைப் பற்றிக் கொண்டு திறவர்கள் ஒருவர் பின் ஒருவராக நடந்து செல்லுங்கள். மலைப்பக்கங்களில் வீழ்ந்தவர்கள் மீள முடியாத குளங்களும், வழுவழுப்பான பாசி படர்ந்த இடங்களும் இருக்கும். எனவே போகும் வழியிலேயே கிடக்கும் சிறு மூங்கில் கழிகளையும், அருவைக் கோல்களையும் ஊன்றிக் கொண்டு மேலே செல்லுங்கள்.

<u>வேடிக்கை பார்க்காதீர் வழி தவறிப் போகும்</u>

"உயர்நிலை மாக்கல் புகர்முகம் புதைய .... இல்புக் கன்ன
கல் அளை வதிமின் (225 - 256)

புள்ளிகள் கொண்ட பெரிய கருங்கல் போன்று முகம் மறைய முகபடாம் போர்த்திய யானைப் படையையும், வில் ஏந்தி அம்பு மழை பொழியும் வீரம் மிக்க படைவீரர்களையும், உச்சியில் பூவேலைப்

பாதுகாப்புடன் கூடிய கோபுரத்தையும் உடைய கோவில்
சென்று ஆற்றங்கரையில் தென்படும். அதைக் கண்டவுடன் பேசி,
அங்குள்ள இறைவனை வணங்கிச் செல்லுங்கள்.
இப்படி வணங்கித் தொழும் போது இசைக்கருவிகளை
இசைக்க வேண்டாம். ஏன் எனில் வளம் மிக்க நன்னனுடைய
நவிர மலையில் எப்போதும் மழை பொழிந்து கொண்டே
இருப்பதால் உங்கள் வாத்தியங்களில் நீர் நனைந்து பதம்
கெட்டுப் போய் விடக் கூடும். வெள்ளையான அரும்பகுதி
உள்ள மடல் போன்ற தோகையை விரித்து மயில்
ஆடுவதைக் கண்டாலும், கழைக் கூத்தாடிகளின்
பிள்ளைகளைப் போன்ற குரங்குகள் மூங்கில் மரத்தின்
மேல்தாவி ஏறுவதைப் பார்க்க நேரிட்டாலும், மலை உச்சியில்
தேர் உருள் போலத் தொங்கும் தேனடைகளைப் பார்க்க
நேர்ந்தாலும் அதையே பார்த்துக் கொண்டு நிற்காதீர்கள்.
அது தேவையும் இல்லை. எனவே விரைந்து மேலே செல்லுங்
-கள். மலையை அடுத்துள்ள காட்டுப் பகுதிக்குள்
செல்லும் போது, பரண்மீது இருந்து வேடன் எய்த அம்பு
பட்டு, வழி மயங்கி ஓடி வந்து வீழ்ந்துள்ள, கரிய
எருது போன்ற பெரிய பன்றியைப் பார்த்தால், மூங்கில்
ஒன்றோடு ஒன்று உரசுவதால் உண்டாகிற காட்டுத்தீயில்,
மயிர்நீக்கித் தூய்மை செய்த இறைச்சியை வாட்டி உண்டு,
வழி நடந்த களைப்புத் தீரத் தெளிந்த சுனைநீரைப் பருகி
இளைப்பாறுங்கள். மீதமிருக்கும் பன்றி இறைச்சியை
மூட்டை கட்டிக் கொண்டு சிறுவர்களுடன் இரவில்
பயணம் போவதைத் தவிர்த்து, உங்கள் வீடு போல இருக்கும்
மலைக் குகைகளில் இரவில் தங்குங்கள்.

## பாதை வழியெல்லாம் பாடும் பறவைகள்.

அல்சேர்ந்து அல்கி அசைதல் ஓம்பி ..... மென்மலை அகன்மலையின்
(256–270) இப்படி இரவில் நீங்கள் எல்லோரும்
குகையில் படுத்துறங்கி இளைப்பாறி வானம் கண்ணைத்
திறந்து விழிக்கின்ற விடியற்காலைப் பொழுதில் துயில்
நீக்கி எழுந்து, நேரான காட்டுப் பாதையில் செல்வீர்களாக.
அப்படிச் செல்லும் போது, யானைகளையும் விழுங்கி
விடக்கூடிய பெரிய மலைப் பாம்புகள் மரம் விழுந்து
கிடப்பது போல வழியில் கிடக்கும். அவற்றை
விட்டு விலகிச் செல்லுங்கள்.

இயற்கையான மணமும் போல இல்லாமல்; புதிதாக ஒன்று போல் தோன்றும், மணமும் வீசும் மலர்களையும், கனிகளையும் வழிகளில் கண்டால் அவற்றைத் தொடாதீர்கள். அவைகள் தெய்வங்களுக்கு உரியன என்று எவரும் அதைக் கொள்ளார். எனவே நீங்களும் அந்த மலர்களையும், பழங்களையும் பறிக்க எண்ணாமல்; இடமும் வலமும் நன்றாக இரண்டு பக்கமும் பார்த்து அவற்றை நெருங்காது, கடந்து செல்லுங்கள். கொம்புகள் நெருங்கிப் படர்ந்த, பல இசைக் கருவிகள் சேர்ந்து பாடுவது போல ஒலி எழுப்பும் பறவைகள் இருந்து வாழும் ஆலமரங்கள் நிறைந்த, இடங்களைக் கடந்து செல்லுங்கள்

<u>மரநிழலில் இளைப்பாறி மகிழ்ச்சி கொள்க:</u>

(271 - 290) "மாநிழல் பட்ட மரம்பயில் இறும்பின்.....
அலர்தாய வளிநிழல் அசையினிர் இருப்பிரன்.

மரங்கள் அடர்ந்த நிழல்தரும் சூரியஒளி உள் நுழைய முடியாத காட்டு வழிகளில் விலங்குகளை வேட்டையாடி வரும் குறவர்களும், மயங்கும் குன்று வழிச் செல்ல நேர்ந்தால், அந்தப் பாதையில் போய்விடாது பாறைகள் மீது நெருங்கி நின்று கல் எறியும் ஒலி; எழுப்பும் உங்கள் இசைக் கருவிகளைத் தட்டி ஒலி எழுப்புங்கள். அப்படி எழுப்பிய உடனே, தண்ணீரில் மூழ்கித் தத்தளிப்போரைக் காப்பாற்றும் கரையவர்களைப் போல, அங்குள்ள வேடர்கள் ஓடிவந்து உங்களுக்கு உண்ண இனிய பழங்களும், பார்த்தவர் வியக்கச் சூடிக் கொள்ள நறுமலரும் தந்து உங்கள் வருத்தம் தீர நீங்கள் செல்ல வேண்டிய பாதையை உங்களுக்கு அவர்கள் காட்டுவார்கள். திசை அறிந்து சேறும் வல்லோர் வகுத்த வழியில் சென்றால் புதியவர்கள் கண்டஞ்சும் சிறியதும் பெரியதுமாகிய குன்றுகள் கடந்து சென்று, மலைகளில் உள்ள மரநிழல்களில் நீங்கள் தங்கி இளைப்பாறுங்கள்.

<u>புனலின் ஓசை மூவையர் ஓசை</u>

"பலதிறம் பெயர்பவை கேட்குவிர் மாதோ....
நெடுவரை இயம்பும் இடியுமிழ் தழங்குகுரல்
(291 - 310).

(291 - 310) அங்கே அந்த மரநிழலில் எழும் பலவகை ஓசைகளைக் கேட்பீர்கள்.

அவை, மலையில் பழுத்த பலாப்பழத்தைக் குரங்குகள் தோண்டிச் சுளைகளை வெளியே எடுக்கத் தோறும் அந்தப் பலாச் சுளையின் வாசம் திசையெல்லாம் மணக்கும், பல பக்கம் இருந்தும் ஓடிவரும் மலை அருவிகள் வாரி அடித்துக் கொண்டு வரும் பொருட்களை, அருவி நீராடும் தெய்வமகளிர் கையில் எடுத்து நீரில் முக்குளிப்பதால் உண்டாகும், இன்னிசை வாத்தியம் ஒலிப்பது போல, ஒலிக்கும் இனிய இசை ஓசை;

கூட்டத்திலிருந்து பிரிந்த ஒற்றை யானை, தினைப் புனத்தில் புகுந்து மேய அதை விரட்ட பரணில் இருந்தபடி கானவர் எழுப்பும் ஒலி, கூர் இரும்பு போன்ற முள்ளுடைய காட்டுப் பன்றியால் காயமுற்ற, கானவர் அழுகுரல் ஓசை, வலிப்புலி பாய்ந்து வருத்திய தலைவனின் மார்பில் பட்ட புண் ஆறப் பாடும், பாட்டின் ஓசை; முதல் நாள் பூத்த வேங்கைப் பூவைச் சூடும் பெண்கள் 'புலி' 'புலி' என்று கத்திப் போடும் விளையாட்டு ஆரவார ஓசை, கருவுற்ற பெண் யானையைக் கவளம் தந்து அதன் கணவனாகிய களிறு பாதுகாப்பாக, அழைத்துச் செல்கையில், இதை ஒளிந்திருந்து பார்த்த புலி, அதன் மேல் பாய, அப்பெண் யானை கதறிப் பிளிறித் தன் கூட்டத்தை தி அழைக்கும் இடி முழக்கம் போன்ற ஓசை;

<u>உயர்மலை எங்கும் வாழ்பவர் ஓசை</u>

கைக்கோள் மறந்த கருவிரல் மந்தி .... நல்லேறு பொருநரும் கல்லென் கம்பலை (315 - 335)

கைப்பிடியை மறந்து தவறவிட்டதால் கீழே மலைப் பிளவில் விழுந்து பட்ட விவரமறியாத தனது சின்னஞ்சிறு குட்டியை எண்ணி, கரிய நிறக்கையுடைய குரங்கு அழும் ஓசை; குரங்குகளும் ஏறமுடியாத மலை உச்சிகளில் உள்ள தேனடையை எடுக்கக் குறவர்கள் போடும் கும்மாள ஓசை, மலைபடு வளங்களை நன்னனுக்கு தந்தும், தம் மனைவியருடன் மான் தோல் போர்த்திய சிறுபறை கொட்டி மகிழ்ச்சியில் ஆடும் குரவைக் கூத்தின் ஒலி, தேர் ஓட்டம் போல ஓடி வரும் மலை அருவிகள் பாறைகளில் மோதி முழங்கும் ஓசை, குழிகளுக்குள் விழுந்து விட்ட யானையை மேலேற்றிப் பிடிக்கப் பாகர்கள் பலரும் கூடி எழுப்பும் பல்வேறு பேச்சொலி, ஒலி எழும் தட்டையை அடித்து தினைப்புனம் எல்லாம், கிளி விரட்டும் பெண்கள் போடும் ஆலோலப் பேரோசை, கூட்டத்தை விட்டுத் தப்பிய காளையும்,

மலையோரம் முட்டிமோதிக் கொள்ளா இசைக்கருவி இசைப்பவர்களும்
குரவர்களும் இருகட்சியாகப் பிரிந்து பந்தயம் கட்டிக்
கவரி, எருமையும் ஆரவாரப் பேரோசை, காட்டெருமைகள்
தமக்குள் சண்டையிட்டு மோதுவதால், காட்டுமல்லியும்,
குறிஞ்சிப் பூவும் இசைநயம் மெல்லிய ஓசையும்;

## மலையின் ஓசை 'மலைபடுகடாம்' இசை

(336-360) "காந்தள் துடுப்பின் கமழ்மடல் ஓச்சி.....
கைதொழுவப் பரவிப் பழிச்சினிர் கழிமின்"

முற்றிய பலாப்பழங்களின் சுளைகளைத் தின்று விட்டு, அதன் கொட்டைகளை y வெட்டுச் சிறுவர்கள் முற்றத்தில் இட்டு; வயலில் நெற்கதிரைத் தாளடிப்பது போல் கன்றுகளை விட்டு மிதித்துக் கடாவிடும் ஓசையும், மழைமேகம் போலப் புகை சூழ்ந்த கரும்பாலைகளில் எல்லாம், கரும்பைச் சாறு பிழியும் ஓசையும், வயலில் தினை அறுக்கும் மகளிர் பாடும் வள்ளைப் பாட்டின் ஒலியும், சேம்பும் மஞ்சளும் வளர்ந்த கொல்லைகளில் அவற்றைக் காட்டுப் பன்றிகள் வந்து தோண்டித் தின்று விடாது இருக்க, அங்குக் காவலிருப்போர் கொட்டும் பறை ஒலியும் கேட்பீர்கள். இங்குக் கூறிய இவை மட்டும் அல்லாமல் இன்னும் இதுபோன்ற பல்வேறு விதமான ஓசைகளும், இவை மலையில் மோதி எதிரொலிக்க உண்டாகும் ஓசையும்; மலைமேலே இருந்தும், கீழே தரையிலிருந்தும் எழும் ஒலிகள் ஒன்று சேர்ந்து மலையாகிய யானையின் பிளிறலாய் - மலைபடுகடாமாக ஒலிக்கக் கேட்பீர்கள்.

## 'கோல்' காலாகக் கொண்டு நடப்பீர்!

(361-375) "மைபடு மாமலைப் பனுவலின் பொங்கிக் ...
கதிர் சினம் தணிந்த அமயத்துக் கழிமின்"

மழைமேகம் படர்ந்த மலைகளில் தங்கியிருக்கும் கருமுகில்கள், கைக்கெட்டிய தூரத்தில் இருந்து கொண்டு சிறு தூறலாய் உங்கள் மேல் மழைத் துளிகளைத் தூவும். திசை தெரியாது தடுமாறும் உம் சுற்றத்தாருடன், நனைந்து வழி நடந்து, இசைக்கருவிகளை நனைய விடாமல் காப்பீர்கள். வழியில் தோன்றும் கிணறு போன்ற குகைகளில் தங்குங்கள். பெரிய மலைகளின் பக்கம் போகாதீர்கள். அங்குப் பெரும் குழிகள் இருக்கலாம். குன்றுகளில் பாதை வழுக்கும் அபாயம் நேரலாம். அதனால் கண்களைக் கவரும் மலைகளில் ஏற வேண்டாம். குழிகள் இருக்கும். எனவே தோலூன்றிப் போவது நல்லது. கம்பு காலாகக் கொண்டு

வழிநடந்தால் துன்பம் இல்லை. வேல் முனை போன்ற இருக்கல் கிடக்கும் குன்றுப் பாதைகளில் பகலில் செல்லாதீர் — மாலையில் செல்லுங்கள்.

## நடுகல் ஆனவரை நின்று தொழுக. (376-400)

"உரைசெல வெறுத்த அவன் நீங்காச் சுற்றமொடு .....
தும்பை வள்ளல் படர்ந்திகும் எனினே"

எல்லோரும் போற்றிப் புகழும், நன்னனுடைய ஆற்றல் மிக்க பகை மன்னர் பலரை வென்ற, அவன் படைத்தலைவர் தலைமை பெற்ற, காவலரண்கள் பலவும் நீங்கள் செல்கின்ற வழியில் உண்டு. சிறிய காட்டு வழியில் போகின்ற போது, அங்கே கொடிகள் பின்னிக் கிடக்கும். யாழின் நரம்பையும் மத்தளத்தின் மார்ச்சனையையும் பாதுகாப்பாகக் கொண்டு விலகிச் - மெதுவாகச் செல்க. முன் செல்கிறவன் விலக்கிச் சென்ற மூங்கில் கோல் பின்னால் வருபவன் முகத்தில் அடிப்பது போல விரைந்து வரும். எனவே அதை விலக்கி முன் செல்பவன் கவனமாகச் செல்லச் செய்க. அடுத்து நெருங்கி நட்டு நடுகற்கள் நிறைய இருக்கும். அவை பகை வென்று போரிட்டு வீர மரணம் அடைந்தவர்கள் நினைவாக அவர் பெயர் எழுதிவைத்து நடுகிறார்கள். புறமுதுகிட்டுப் பகைவர்களைப் பார்த்து சிரிப்பது போல இருக்கும். இந்தக் கற்களைத் தெய்வங்களாகப் போற்றி யாழ் மீட்டிப் பாடி அவ்வீரர்களுக்கு வணக்கம் செலுத்தி வழிப்பயணத்தைத் தொடருங்கள். வழி தவறி காட்டுச் சென்று போக வேண்டிய வழிச் சென்றவர்கள், காட்டுத் திரும்பி வந்து தரையைத் தடவி உலகம் புல்லை முடித்து வைத்திருப்பார்கள். நீங்களும் அப்படியே உலகம் புல் முடித்து வைத்துப் பின் பயணம் தொடருங்கள். காடுகளில் நடுகல் நட்டுள்ள இடங்களில் நன்னனுடன் அன்பு கொள்ளாத அவனுடைய பகைவர் பலர் ஒளிந்திருக்கும் காடு மறைந்து இருப்பார்கள். அவர்கள் குறுக்கிட்டால்! நாங்கள் கொடியது. எனவே அவர்கள் மலர்களாலான மாலை சூடிய, தோல்வண் தேன்பாயும் நன்னனை நாடிச் செல்லும் பரிசிலர்' என்று வள்ளல் கூறுங்கள்.

## தோல் படுக்கையில் தூங்கி மகிழ்க.

அவன் தொல்திணை மூதாஅர் .....
"வேட்ப வெறுத்த சேர்ந்தனிர் கழிமின்" (401-420)

தீத்திணை ஆக்கச் சொன்னால் போதும்; அந்தப் பகைவர் வாழும் அப்பதி நீங்கள் சொன்னால் பரிசிலர்க்கு, இனிய புகலிடமாகவே இடமே, நம் போன்ற பரிசிலர்க்கு, இனிய புகலிடமாகவே அமையும். எனவே நீங்கள் கவலை இன்றிச் சில நாள் தங்கி இருங்கள். தினைமாவினைப் புளி கொண்டு, தன் திணையின் மிகுதியான பெண்ணை வாழ்த்தப் போயிருந்தால், கட்டு வழி துன்பம் கனைபானம் கதிரி அமிழ்ந்தும், வெறுத்துக் காட்டு வழி துன்பம் நிறைந்தது.

இந்நகைய துன்பந்தரும் காடு நீங்கி, வில்லோசை கேட்டதும் விரைந்தோடும் செங்கண் மான் கூட்டமும் சாரலின் பக்கமும் நடக்கவும். நடந்தால், வேற்றிடம் சென்று மேய்ந்து வந்த பசுக்களின் இனிய சுவையான பாலை இடையர்கள், உங்களின் வழி நடந்த வருத்தமும் தீரத் தருவர், நீங்கள் அது பெற்று, வருத்தமும் சோர்வும் நீங்கிய புதுமனிதர் போலிருப்பீர்.

பண்டமாற்றாகப் பெற்ற பலவகைக் கவலை நெல் அரிசி போல, வெண்ணாவும் செவ்வரியாடும் கலந்து மேயும் முல்லை நிலத்தில் கடல் போல ஒலி செய்யும் காட்டரல் இருக்கும் இடையர் குடியிருப்புகளுக்கு நீங்கள் இரவில் செல்ல நேர்ந்தால், அங்கே அவர்கள் தங்களுக்கு என வைத்திருந்த பாலும் பாற்சோறும் உண்ணத் தந்து, மயிர் நீக்கிய ஆட்டுத் தோலான படுக்கையை உங்களுக்குத் தந்து துயில் கொள்ளச் செய்வார்கள். இரவில் காட்டு விலங்குகளால் உங்களுக்குத் துன்பம் நேர்ந்துவிடாதபடி தீ மூட்டித் துணை இருப்பார்கள். இங்கே தங்கி இரவைக் கழியுங்கள்.

## குளிர்ந்த நீரில் குளித்து மகிழ்க.

(421 - 435) "சுவைப்படு கடக்கும் சுவர்நல் அம்பில் .....
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்"

எய்தால் சுப்பாடு தூரம் வரை மட்டுமே செல்லும், கரிய அம்பையும், வளைந்த வில்லையும் உடைய, வேடர் கூட்டம் கண்ணிய படுமானால், அவர்களிடம், 'நாங்கள், தனக்குப் பணியாதவர்களை வென்ற, பிறர் எவர்க்கும் பணியாத ஆண்மையாளன், கொடை போன்ற கோதை கணவன்; நன்னனைக் காணப் போகிறவர்கள்' என்று சொன்னால் போதும்; அவர்கள் உங்களுக்கு இறைச்சியும், கிழங்கும் தந்து உபசரிப்பார்கள். அவற்றைப் பெற்று மகிழ்ந்து பயணம் தொடர்வீர்களாக. இப்படி அவர்கள் உங்களுக்கு உதவுவார்களே தவிர, துன்பம் தர மாட்டார்கள். நீங்கள் அவர்கள் கூறும் வழியில் செல்லுங்கள். தேன் சிந்த மலர்ந்த வெண்கடம்பப் பூவும், யானை முறித்துப் போட்ட யா மரத்தின் பூவும், கற்றாழை நாரினால் நெருங்கக் கட்டி அதிரச் சூடிக் கொண்டும், மேட்டு நிலத்துக் குளிர்ந்த நீரை உண்டும்; நீராடியும் / மேலும் வழிப் பயணத்துக்கும் குடிநீரை எடுத்துச் செல்லுங்கள். சிவந்த வேங்கைப் பூப் போன்ற நிறத்தில் அரிசிச் சோற்றுடன் நெல்லரிசி உணவும், அவரை விதையைப் புளியிட்டுக் கரைத்த உலையில் வைத்து எடுத்த

புளிக்கறி உணவை இரவிலே உண்ணுவீர்கள். பிறகு களைப்புத் தீர மேலும் சில நாள் அங்குத் தங்குவீர்களாயின் தினைமாவோடு கலந்து செய்த உணவையும் நெய்யோடு; தினைப்புல் வேய்ந்த குடிசைகள் தோறும் தரப் பெற்று மகிழ்வீர்கள்.

## மகிழ்ச்சி மலர் தூவும் மருத நிலப் பகுதி:

"பொன் அறைந் தன்ன நுண்ணேர் அரிசி....
விளங்கதிர் ஞாயிற்றுக் களங்கள் தொறும் பெறுகுவிர்
(440-446) பொன் போலும் மெல்லிய அரிசி கொண்டு வெள்ளியை உருக்கி விட்டது போலச் சமைத்த வெண் சோற்றை, நெய்யும், தினைமாவும் கலந்து தின்னத் தருவர். மேலும் சில நாள் அங்குத் தங்குவீர்களேயானால் நாயமரத்தின் விறகில் செந்தீக் கோல் கொண்டு தீ மூட்டி பனிக்குளிர் நீங்கித் துயிலப் பண்ணுக. விடிந்து பொழுது புலர்ந்ததும், பறவைகள் ஒலியும் நல் நிமித்தம் கண்டு புறப்படுங்கள்.

காஞ்சி மரமும், அறுகம் புல்லும், நீர்வளம் மிக்க வயல்களும், பொழில்களும் நிறைந்த நன்னாடுடைய மருதநிலப் பகுதி. அங்கே கின்னரை ஒலிக்கும்படுத்துப் பட்டது போன்ற இனிமை தரும் சோலைகளும், குடியிருப்புகளும் அழகுறக் காணப் பெறும். இங்கு நீங்கள் பலநாள் தங்கினாலும், ஒரு நாளே தங்கிப் புறப்பட்டாலும்; உங்களுக்கு நலம் தரும் நல்ல மருத நிலநாடு அது. வயல்களில் விளைந்த நெல்லும், வலை வீசுவோர் பிடித்து வந்த பெரிய வாளை மீன்களும், தூண்டில் போடுவோர் பிடித்துக் கொண்டு வந்த வரால் மீன் துண்டுகளும், குறிஞ்சிப் பூ அணிந்த மகளிர் நண்டுக் கறியுடன் தருவர். பொன் தார் பூ மாலை சூடிய நன்னன், உண்ணத் தரும்பதமான நல்லரிசிச் சோற்றையும், கள்ளையும் வீடுகள் தோறும் பகல் பொழுதில் பெறுவீர்.

## நாள் எல்லாம் திருநாளே நன்னன் நாட்டில்

"முன்னாக இயற்றிய வெள்ளி வெண் சோறு....
நனி சேய்த் தன்று அவன் பழவிறல் மூதூர்".
(465-485) முள் நீக்கி, ஆக்கிய மீன் கறியை வெண்மையான அரிசிச் சோறு; தேன் சிந்தும் மலர் மாலை சூடிய நன்னனுக்கு ஏற்றதாகும். என்று

சொல்லமாகிலும், காணமேவர் சுற்றத்தாருடன் இருந்து உண்டு, எருதோட்டி உழவு செய்யும் மருத நில உழவர்கள் பாடும் ஓர் மங்கலப் பாட்டுக்கு ஏற்ப நீங்களும் யாழ் மீட்டி, இசை கூட்டி, மருதம் பண் பாடித் தினமும் தங்கி இருங்கள்.

மருத நிலத்தில் வெண்ணெல் அறுப்பவர்கள் கொட்டும் மருதம் பறை ஓசைக்குப் பயந்து கூட்டத்தை விட்டு ஓடி வரும் எருமைக் கடா வேகமாகப் பாய்ந்து வரும். அது உங்களைத் தாக்காமல் பார்த்து விலகிச் செல்லுங்கள். மண்பாண்டம் செய்யும் குயவன் சுற்றும் சக்கரம் போலக் குமிழிகள் சுழன்று தோன்றும் மடுக்கள் நிறைந்த காண்பதற்கு இனிய சேயாற்றின் ஒரு கரை வழியாகச் செல்லுங்கள்.

திருமகள் தங்கி வாழும் உயர்ந்தோங்கிய மாடங்களை உடைய, தொன்று தொட்டு, நகர் விட்டு நீங்கல் இல்லா பழம் பெரும் குடிகள் தங்கி வாழும் ஆரவார ஒலி மிக்க குறுந்தெருக்கள், மழை தொடும் மலை என ஓங்கி உயர்ந்த மாடங்கள், குளிர் மலர்ச் சோலைகளில் பாடி ஒலி செய்யும் வண்டுகள். இப்படிப் பலவகையாலும் சிறப்புப் பெற்ற நன்னகரைப் புகழ்மிக்க உனக்கு பக்கத்திலேதான் உள்ளது. தொலைவில் உள்ளதன்று அது.

உங்களைப் போலப் பலபேர் அங்கே...

"பொருந்தாத் தெவ்வர் இருந்தலை துமியப் ... பாடுலமும் அனைத்தரும் வருத்தம் வீட (488-497)

நன்னனுடன் பகை கொண்ட மன்னர்கள் தலை, மண்ணில் புரள, போர் வெல்ல வல்ல, வீரவாள் ஏந்திய மறவர்கள் வேல்களை நட்டு வைத்துக் காவல் செய்யும், திட்டிவாசல் கதவுடைய கோட்டை வாசலைக் கண்டு அஞ்சாமல் உள்ளே நுழையுங்கள். உங்களைப் போலவே உங்களுக்கு முன்னமேயே நன்னனைக் காண ஊர் அம்பலத்தில் வந்து காத்திருக்கும் கூத்தர் குதுகலமாக, 'பாவம் இவர்களும் நம்மைப்போலப் பசியில் பெரு வெகுதூரத்தில் இருந்து வருகிறார்கள் போலிருக்கிறது' என்றெண்ணி, அன்புடன் பார்த்து, அகம் மலர முகம் மலர நோக்கி உங்களை விருந்தினர் போல் எதிர் கொண்டு வரவேற்பர். நீங்களும் வழிநடந்த வருத்தம் தீர அவர்களுடன் தங்குங்கள்.

## நாட்டு வளமெல்லாம் ஒருங்கு முற்றத்தில்

எரி கொன்றன்ன ஆங்கிணை மராஅத்துத் .... நோனாச் செருவின் நெடுங்கடைத் துவன்றி.

(498 - 525) அரண்மனை முற்றத்தில், நெருப்புச் சுடர் போலப் பூ பூக்கும் மராமரத்தின் நிழலில், மாற்றாரை எல்லாம் தப்பித்து ஓடவிடாதவன் மட்டும் அகப்பட்டுக் கொண்ட வளைந்த காலுடைய மான் குட்டியும், யானைக் கன்றும், தாயின் வாய் திறவாத சிறு குட்டியும் வளைந்த காலுடைய மலையில் வாழும் மலையாடும், ஆண் கிடாவும், மரையான் குட்டியும், பாம்பைப் பிடிக்கின்ற சிறு கண்ணுடைய கீரியும், பாறைகளில் வாழும் உடும்பும், மலையில் நின்று ஆடும் மயிலும், காட்டுக் கோழியும் கூவும் குரலுடைய சேவலும், குடைபோலத் தொங்கும் பலாப்பழமும், இனிய சுவைமிக்க சாறுடைய வாழைக்கனியும் நாரைக்கொடியும், நூலைக் கிழங்கும், பளிங்கு போன்ற பல உருவில் மணிகளும், யானைத் தந்தங்களும், கற்பூரமும், புன்னை மலரும், சந்தனமும், மிளகும், கள்ளின் தெளிவும், சிங்கலில் குடையால் தோய்ந்த தயிரும், இறாலும் குடுக்கையில் தோன்றிய காவிரிப் பேரியாறு, கடலில் கலக்கும் காட்சிபோல நிறைந்திருக்க, அவன் வெற்றிப் புகழ் நீங்காது நிறைந்து ஒளி செய்யும் வாசல் முற்றம் நிறைந்திருக்கும்.

## இசையும் குரலும் இணையப் பாடுக.

" பாலைத் தன்ன வளைவளை யானைத் .. சென்றது நெடியும் பாடாஅன் நனைதர (530 - 545)

வானத்தில் கூட்டமாய் வந்து நிறைந்தது போலிருக்கும். வளமிக்க யானைத் திரள் நிறைந்த முற்றத்தை அடைந்து, மழை போலும் மத்தளம் முழங்கி ஒலி செய்ய, பெருவங்கியம் என்னும் குழலின் கண்கள் திறந்து காற்றால் இசைவரு மருதப்பண்ணை, கருங்கோடுடைய சிறிய யாழ் நரம்பின் இசை ஒலி மிகாமல் பாடும் குரலுடனும், யாழ் இழுவுடனும் ஒன்றி இருக்கப் பாடும் முறை அறிந்து பாடவல்ல இனிய குரலுடைய விறலியர், வழிவழிவந்த முறைப்படியும், பாடும் முறை மீறாமலும் குறள் பேராற்றலுடைய இறையருள் போற்றிப், மிகுதி புதிதாக அமைத்த இசையும் பாடலும் இனிதே வழங்கி, " நின்றாப் புகழுடைய சான்றோர்

சிறப்பார்ந்த தலைவனே! தம்பெயர் இங்குமட்டும் அல்லாது எங்கும் பரவ, உலகமெல்லாம் சென்று சேர, நன்மை தீமைகள் இரண்டுக்கும் இடையிலான தன்மைகளை உணர்ந்து, அவற்றைக் கடந்து நல்லதே செய்த பலரும் மறைந்து போக, அவர்கள் கொண்ட பணியான கொடைமடம் காத்தலை விடாது மேற்கொண்டிருக்கிற வேந்தர் பெருமானே!" என்று நன்னனுடைய வெற்றிப் புகழ் போற்றி, மேலும் மேலும் நீங்கள் பாடுக. அப்படிப் பாடும் போது உங்களை முழுதும் பாடவிடாது இடைமறித்து நீங்கள் மகிழ

<u>வாழ்த்தி</u> <u>நீங்கள் வந்ததே போதும்.</u>

வந்தது சாலும் வருத்தமும் பெரிதெனப் .....
உவந்த உள்ளமொடு அமர்ந்தினிது நோக்கி.
(546-560) "நீங்கள் என்னைத் தேடி வந்ததே பெரிது. இதுவே போதும். மேலும் நீங்கள் வழிநடந்து வந்த வருத்தமும் பெரிதாயிருக்கும் உங்களுக்கு" என்று கூறி மகிழும் அவனுடைய போர் செய்ய வரும் பகைவரை எதிர்பார்த்து எந்நேரமும் காத்திருக்கும், படைத்தலைவர்கள் சூழவும், பொலிவுற்று விளங்கும், திருவிளங்கும் அரண்மனை முற்றத்தைச் சென்று சேருங்கள்.

"கல்!" என்றும் ஒலி முழங்க, சான்றோர் சுற்றத்தாருடன் கூடி, பெரிய நாடும், அரசுரிமையும் இருந்தும், வந்தவர்களுக்கு இல்லை என்று கைவிரித்து தம்முடைய பெயர், தம்முடனே மறைந்து விட, மாய்ந்தொழிந்தவர்கள் தொகை மணல் அளவு, கொண்டு வந்து கொட்டிய, நீர் ஓடிக் கழிந்த சேயாற்றங் கரையின் கருமணல் பரப்பினும் அதிகமாகும்.

எனவே, நம்முடைய வாழ்வு நமக்கென்று வரையறுத்து வைத்துள்ள வாழ்நாள் காலமட்டும், நமது புகழ் வானென விரிந்து வளர்ந்து செழிக்க வேண்டும் என்ற விரிந்து பரந்த உள்ளத்தோடு, அவனிடம் பரிசில் பெற வேண்டிப் போயிருக்கிற உங்களைக் கண்டு மிகவும் மகிழ்ந்தவனாக உங்களை அன்புடன் அகம் மலரப் பார்த்து,

<u>மணல்போலப் பொழியும்</u> <u>கொடை பெற்று</u>
<u>மகிழ்க</u> (561-583)

"இழைமருங்கறியா நுண்மைநூற் கலிங்கம்... இன்றுத்தும் இருக்கை நாடு கிழவோனே"

நூற்ற இழை போன உட்டறியாதபடி நுண்ணியதாக நூற்று நெய்த, வெண்ணிறம் உடைய, உயர்ந்த நல்ல உடையை நீங்கள் உங்கள் இடைசுற்றி அணிய, வேட்டை நாய் பற்றிக் கொண்டு வந்த விலங்குகளின் கொழுத்த தசையை, வெண்ணிற நெல் அரிசிச் சோற்றுடன் அன்பால் குறைதல் இல்லாமல், முதல்நாள் உங்களைப் பார்த்த போது, பழகியது போன்ற அதே உபசரிப்பை - வரவேற்பை அங்கு நீங்கள் எவ்வளவு நாள் தங்கி இருந்தாலும் கிடைக்கப் பெறுவீர்.

இதுவுமல்லாமல போன முதல நாளே, நாங்கள் எங்கள் ஊர் போகப் புறப்படுகிறோம்" என்று, நீங்கள் மெதுவாகச் சொன்னாலும் போதும், உடனே உங்கள் தலைவன் பொற்றாமரைப் பூச் சூடவும், விறலியர் பொன்னரி மாலை பூணவும், அணிமணிகள் நிறைய, நீரோட்டம் போல, ஓடும் தேர்களும், மலை போன்ற வலிமை நிறைந்த யானை மணி ஆடும் கழுத்து மயிருடைய குதிரைகளும் காளும், இன்னும் மண்ணில் விளைந்த பல வளங்களையும், வறுமையைப் போக்கும் புலவர்கள் வாழ்வில் வளம் நிறையத் தருபவன், வளம் குறையாது, நலம் பெருகி நாளும் கூட, மூங்கில் தழைத்து வளரும் நவிர மலையில் மழைபொழிவது போலக் கொடை வழங்கி, உங்களை மகிழ்வோடு ஊர் திரும்ப விடுபவன், யாரெனில், அவன்தான் நவிரமலைக்குரிய நன்னன்; கொடைவளம் வெற்றிக் கொடியாகப் பறக்கும் நவிரமலைத் தலைவன்.

## பகுதி - அ

1. மலைபடுகடாம் நூற்குறிப்பு தருக
2. பாணர்கள் ஊர்களைத் தொகுத்த நிலையினை விளக்குக

## பகுதி - ஆ

1. 'கொடைமடம் காத்த குலத்தவன் நன்னன்' - விளக்குக
2. "நாள் எல்லாம் திருநாளே நன்னன் நாட்டில்" - குறிப்பிடுக
3. நன்னது நாட்டின் சிறப்பினை விவரி
4. நெய்ச்சோறு விருந்து பாணர்களுக்கு எவ்வாறு வழங்கப்பட்டது?
5. 'புனலின் ஓசை பூவையர் ஓசை' - விளக்குக.

## பகுதி - இ

1. மலைபடுகடாமில் நன்னனது சிறப்புகள் எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது?
2. மலைபடுகடாமின் மாண்புகளை பெருங்கௌசிகனார் எவ்வாறு சித்தரித்துள்ளார்?